T.C-043

**018/DD/24**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## GENERAL EDUCATIONAL TEST OF THE S.S.L.C. STANDARD – PAPER-I – GENERAL TAMIL

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**I. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி :** (6 × 4 = 24)

1. வள்ளலார் பசிப்பிணியை நீக்க என்ன செய்தார்?

2. முத்துராமலிங்கத்தேவரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் மூலம் தடைவிதிக்கப்படக் காரணம் யாது?

3. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?

4. இந்தியாவில் பேசப்படும் மொழிகளை எத்தனை மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கின்றனர்? அவை யாவை?

5. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

6. ஒரு சொல்லின் பகுதியைக் கீழ்க்கண்ட வடிவங்களில் எழுதுக.

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் |
|---|---|---|---|---|
| பார் | கண்ணன் ______ | ______ கண்ணன் | ______ முடித்தான் | கண்ணா ______! |

7. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

8. கொற்கை முத்து பற்றி எழுதுக.

[Turn over

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி :** (6 × 6 = 36)

9. காமராசரின் கல்விப் பணிகள் குறித்து எழுதுக.

10. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.

11. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?

12. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

13. பெரியாரின் சிந்தனைச் சிறப்புகள் பற்றி எழுதுக.

14. (அ) பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

(i) பானையை உடைத்தது கண்ணன் அல்ல.

(ii) சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லோம்.

(iii) பகைவர் நீவிர் அல்லர்.

(ஆ) பின்வரும் பழமொழிகளை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

(i) கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.

(ii) நெல்லுக்குப் பாய்கிற நீர் புல்லுக்குப் பாய்வது போல.

(iii) மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.

15. ஒழுக்கமுடைமை எனும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் மூன்று கருத்துகளை எழுதுக.

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி :** (4 × 10 = 40)

16. உரைப்பகுதியைப் படித்து சுருக்கி எழுதுதல் :

பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து, இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம்வரை சுவைத்தவள் நான். அவித்து, காய்ந்து, குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை, அதன் வழவழப்பை, கடுப்பு மணத்தை, சோறாகுமுன் கைநிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு. இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும். விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழையசோறு அல்லது பழையது. காத்திருந்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து நீராகாரம்போல் குடிப்பது ஒருவகை. வாழை இலையில் அந்தப் பழைய சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நாரத்தங்காய் அதனுடன் சேர்ந்துகொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்ட வைத்த முதல்நாள் குழம்பு இன்னும் உச்சம்! நல்ல பழையது மாம்பழ வாசம் வீசுமாம். பழையசோறு அது கிராமத்து உன்னதம்.

17. எழுத்துச் சீர்திருத்தத்தில் வீரமாமுனிவர், பெரியார் மேற்கொண்டவை எவை?

18. கல்வியில் சிறந்த பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

19. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் பற்றிக் கூறுக.

20. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

நூலகம்

முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்திலுள்ளவை – படிக்கும் முறை – முடிவுரை.

---